தனிப்பட்ட வரைமுறைகள் இருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே கூடத் தெளிவாக அவை வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. பேரவையால்தான் அந்த மேலவையே உருவாக்க படுகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, அதில் இல்லாததை எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறீர்கள். இப்படிச் செய்யக் கூடாது. தாங்கள் கொடுத்ததில் இல்லாததை எல்லாம் படிப்பது போன்று பேசிக்கொண்டு போகிறீர்கள் இது வரவேற்கத்தக்கது அல்ல—தாங்கள் கொடுத்ததை முடித்து விட்டீர்கள். நீங்கள் முதலிலேயே நான் கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொன்னது இங்கே பதிவாகி இருக்கிறது. ஆகவே, நீங்கள் மேற்கொண்டு பேசுவது கூடாது. உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: யார் மீது உரிமை மீறல் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதைச் சொல்ல வேண்டாமா? மேலவை என்பது சட்டப் பேரவையால் உருவாக்கப்பட்டது. அதை அபாலிஷ் பண்ணலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மேலே போகாதீர்கள். முடித்து விடுங்கள்.

திரு. க. சுப்பு: முடித்து விடுகிறேன். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வருகிறேன். அதற்கு அனுமதி அளித்து, அதை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைத் தீர விசாரித்து, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

(முற்பகல் 9-20)

3. அறிவிப்பு

கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உள்ளன. இவை அஜன்டாவிலே இருப்பதாலே, எடுக்கவேண்டியுள்ளது. இவற்றையும் நாளை எடுத்துக்கொள்ளலாமென்றால், எடுத்துக் கொள்ளலாம்.

அவையின் அனுமதியுடன் 41-வது விதியின்கீழ் உள்ளதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 17]

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நேற்றையதினம் இந்த அவையிலே மாண்புமிகு அங்கத்தினர் வின்சென்ட் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி அவதூறாகப் பேசியிருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் ரிசர்வ்ட் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தங்கள் ரூலிங் என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் கொடுப்பேன்.

திரு. துரைமுருகன் : இன்னொரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே சத்தம் போட்டுப் பேசுகிறீர்கள்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

வானொலியில் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாகக் கூறியது குறித்து

*திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் நேற்றைய பிரச்னையின் ஆழத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றைய பிரச்சினை பத்திரிகையிலே வேறு மாதிரியாக வந்திருக்குமானால் அந்தப் பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்து, தங்களிடத்திலே நான், அது உரிமை மீறலா அல்லவா என்பதைக் கண்டறிகிற வாய்ப்பினை வழங்குவதற்கு எனக்கு வசதியாக இருந்திருக்கும். அதற்கு மாறாக, வானொலியிலே அந்தச் செய்தி வேறு விதமாகத் திரித்துக் கூறப்பட்டது. வானொலியின் மீது உரிமைப் பிரச்னை எழுப்ப வேண்டுமானால் நான் எந்தவிதமான ஆதாரங்களையும் கொண்டு வர முடியாது. நான் கேட்டதைத் தான் சொல்ல முடியும். ஆனால், தங்களுக்கிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி வானொலி நிலையத்திலிருந்து நேற்றைய 7 மணி சட்டமன்ற நடவடிக்கை என்கின்ற செய்தித் தொடரில் என்ன கூறினார்கள் என்று அந்தப் பிரதியைத் தாங்கள் பெற முடியும்.